இனிப்பு, சொக்கலட், பிஸ்கட் மற்றும் பழவகைகள் விற்பனையாளர்
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சேக் தயாரிப்பு பொருட்கள் மற்றும் குளிர்பானத் தயாரிப்புகளைப் பெற்றிட
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 09 திங்கட்கிழமை (23 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 176

# 'சுப்பசொனிக்', 'புக்காரா' நேற்று கொடூரம்!

# நீர்வேலியில் ஒரே குடும்பத்தில் மூவர் பலி!!

## மற்றும் மூவர் படுகாயம் சிறுமி நினைவு இழந்தார்

யாழ்ப்பாணம், மே 23

ஸ்ரீலங்கா விமானப்படையின் "சுப்பசொனிக்" விமானங்கள் இரண்டும் "புக்காரா" விமானம் ஒன்றும் நேற்றுக் காலை நீர்வேலிப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர்; மூவர் படுகாயமுற்றனர்; பதினொரு வயதுச் சிறுமி ஒருத்தி அதிர்ச்சிக்குள்ளாகி நினைவு தடுமாறியுள்ளார்; பல கால் நடைகளும் பலியாகின; பெறுமதி மிக்க உடைமைகளும், பயன்தரு மரங்களும் அழிந்து நாசமாகின.

நீர்வேலி கரந்தன் சந்திப் பகுதி குடியிருப்புகள் மீதே இக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காலை 6.15 மணியளவில் பேரிரைச்சலுடன் வந்த 'சுப்பசொனிக்' குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு குத்திப் பதிந்து குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசின.

அவை மேலெழுந்து பறந்து சென்ற கையோடு அப்பகுதிக்கு விரைந்த 'புக்காரா' விமானம் ஒன்றும் அதே பகுதியை நோக்கி குண்டுகளை வீசியது.

'சுப்பசொனிக்' விமானங்கள் நான்கு குண்டுகளையும் புக்காரா விமானம் ஐந்து குண்டுகளையும் வீசின.

'சுப்பசொனிக்' விமானத்தின் குண்டு வீச்சில் — கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த சின்னத்தம்பி சிவதர்சினி (வயது 18) என்ற மாணவி தலையில் படுகாயமுற்றார். ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

'சுப்பசொனிக்' குண்டு வீச்சின் போது இவரின் அருகில் நின்று தப்பிய இவரது தந்தையான வேலுப்பிள்ளை சின்னத்தம்பியும் (வயது 60), மைத்துனியான கணபதிப்பிள்ளை புஷ்பராணியும் (வயது 28) அடுத்து வந்த 'புக்காரா' விமானத்தைக் கண்டு அவ்விடத்தை விட்டு ஓடிக் கொண்டிருந்த வேளை அவர்களை நோக்கி 'புக்காரா' வீசிய குண்டினால் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் சின்னத்தம்பியின் தலை சிதறியது.

சுப்பசொனிக் குண்டு வீச்சில் சண்முகம் முத்துப்பிள்ளை (வயது 78), அரசசேகம் மனோரஞ்சிதம் (வயது 35) ஆகியோரும் —

புக்காரா குண்டு வீச்சில் கந்தையா ஜெயவீரசிங்கம் (வயது 17) என்பவரும் காயமுற்றனர்.

[5 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



பிரேமாவுக்கு குந்தகம் செய்து பாடம் படிச்சிட்டார் எல்லோ......!

## ஷெல் தாக்குதல்

தாளையடி, மே 23

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் பகலும் இரவும் தொடர்ச்சியாக உடுத்துறை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

வெற்றிலைக்கேணி, ஆனையிறவு தொடர் இராணுவ வேலிப்பகுதியிலிருந்தும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

## ப. நோ. கூ. ச. தலைவரும் மகளும் மருமகளும் பலி!

யாழ்ப்பாணம், மே 23

நேற்றைய குண்டு வீச்சில் உயிரிழந்த வேலுப்பிள்ளை சின்னத்தம்பி நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராவார்.

உயிரிழந்த இவரின் மகளான சிவதர்சினி வேம்படி மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவியாவார்.

சின்னத்தம்பியின் மருமகளே உயிரிழந்த மற்றைய பெண்ணாவார்.

## பாடசாலையும் வீடுகளும் குண்டு வீச்சினால் சேதம்

யாழ்ப்பாணம், மே 23

நேற்றுக் காலை நீர்வேலிப் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் கரந்தன் சந்தியில் உள்ள இராமுப்பிள்ளை வித்தியாலயம் சேதமுற்றது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை பாடசாலை விடுமுறை தினமாகையால் பாடசாலைகளில் அதிகமானவர்கள் இருக்கவில்லை.

பாடசாலையின் கூரையை குண்டுச் சிதறல்கள் தாக்கிய போதும், அங்கு பிரத்தியோக வகுப்புகளில் பயின்று கொண்டிருந்த மாணவர்கள் பாதுகாப்பு இடங்களை நாடிய தால் காயங்கள் எதுவுமின்றி தப்பினர்.

இக்குண்டு வீச்சால் அப்பகுதியில் உள்ள சுமார் பத்து வீடுகள் சேதமுற்றன; மூன்று வீடுகள் முற்றாக நாசமாகின.

வீடுகளில் இருந்த உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், சைக்கிள் போன்றவையும் சேதமுற்றன.

## நேற்றுக் காலையில் பதற்றம்

யாழ்ப்பாணம், மே 23

நேற்றுக் காலை 6-15 மணியளவில் நீர்வேலியில் தாக்குதல் நடத்திய "சுப்பசொனிக்" விமானங்கள் வலிகாமம் பகுதிக்கு மேல் பேரிரைச்சலுடன் வட்டமிட்டதால் காலையில் குடாநாட்டில் பதற்றம் நிலவியது.

எனினும் "சுப்பசொனிக்" விமானங்கள் சற்று நேரத்தில் சென்று விட்டதை அடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியது.

## வடக்கே கூடுதலாக ம. எண்ணெய் வரும்

யாழ். மாவட்டத்திற்கு கூடுதல் மண்எண்ணெய் அனுப்ப புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக —

யாழ். மாவட்டத்துக்கு மாதாந்தம் எவ்வளவு மண்எண்ணெய் தேவை என்ற விவரத்தை அறிவிக்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு யாழ். செயலகத்தைக் கேட்டுள்ளது;

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு மாதாந்தம் 4 லீற்றர் வீதம் வழங்கவும் —

விவசாய, கைத்தொழில் முயற்சிகளுக்கும் —

மொத்தம் 7 ஆயிரம் பரல் மண்எண்ணெயை மாதாந்தம் அனுப்புமாறு யாழ். செயலகம் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு நேற்று அறிவித்துள்ளது.

தற்சமயம் யாழ். மாவட்டத்துக்கு மாதாந்தம் 4 ஆயிரத்து 500 பரல் மண்எண்ணெய் எடுத்துவரவே அனுமதி வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

மாதாந்தம் ஒதுக்கப்படும் மண்எண்ணெயை வடக்கே எடுத்து வரும் பணியில் 'மாஹோ' கப்பல் தொடர்ந்து ஈடுபடும் எனவும் தெரிவிக்கப் பட்டது. [உ-3]

## அமைச்சரவையில் இவ்வாரம் மாற்றம்?

அமைச்சரவை இவ்வார இறுதிக்குள் மாற்றியமைக்க ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முடிவு செய்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இம்மாற்றத்தின் போது சிறிசேன கூரே, விரசிங்க மல்லிமகாராய்ச்சி, ரூபா கருணதிலகா, திருமதி. ரேணுகா ஹேரத் ஆகியோரை அமைச்சரவையில் இருந்து நீக்க ஜனாதிபதி முடிவு செய்திருப்பதாக மேலும் தெரிவிக்கப் பட்டது.

காமினி திஸநாயக்காவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவிருப்பதுடன் கல்வி, உயர் கல்வி, விவசாய அமைச்சர் பதவிகளிலும் மாற்றம் செய்யப்படவிருப்பதாகத் தெரிய வந்தது. (உ-3)

## 'சொத்தி' உபாலிக்கு கொலைபயமுறுத்தல்!

தற்போது அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'பாதாள உலக' தலைவரான சொத்தி உபாலிக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுவிக்கப்பட்டிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து —

வேறொரு இடத்துக்கு சொத்தி உபாலியை இடமாற்றஞ் செய்து அங்கு வைத்து அவரை தொடர்ந்து விசாரணைக்குட்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

## மண்டூர் தமிழ்க் கிராமங்களில் உள்ள ஆண்களை வாரம் தோறும் முகாமுக்கு ஆஜராக பணிப்பு

கொழும்பு, மே 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டூரில் அண்மையில் பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்ட சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து

மண்டூர் கிராமத்திலும் குடியிருப்புப் பகுதிகளிலும் வசிக்கும் 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரும் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் அருகில் உள்ள முகாமுக்குச் சென்று கையொப்பமிட வேண்டும் என விசேட அதிரடிப் படையினர் பணித்துள்ளனர்.

காலை எட்டு மணிக்கு அனைவரும் முகாமிற்குச் சென்று கையொப்பமிட வேண்டும் என்றும், தவறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் படையினர் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதிருப்தி தெரிவித்து பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமரர் நித்திக்கு தலைவர் புகழாரம்

### நாட்டுப்பற்றாளர் எனக் கௌரவம்

யாழ்ப்பாணம், மே 23

மறைந்த துரைராஜா நித்தியானந்தன் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனினால் நாட்டுப் பற்றாளர் எனக் கௌரவிக்கப்பட்டிருப்பதாக "புலிகளின் குரல்" வானொலி அறிவித்தது.

நேற்று முன்தினம் மரணமான திரு. நித்தியானந்தன் நீண்ட காலமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தன்னை இயன்ற அளவு இணைத்துக் கொண்டவர்.

'நிதர்சனம்' நிறுவனத்தின் வளர்ச்சிக் காலம் தொட்டு இன்று வரை அதற்கு துணையாக நின்று உதவி நல்கியவர்.

தமிழீழத்தில் இருந்து ஒலி, ஒளி நாடாக்கள் வெளியாவதற்கு தனது தொழில்நுட்ப ஆற்றலையும் ஒத்துழைப்பையும் பூரணமாக வழங்கியவர்.

மறைந்த நித்தியானந்தனின் இறுதிக் கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றன.

போராளிகள், கலைஞர்கள், கல்விமான்கள் உட்பட ஏராளமானவர்கள் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

## 'சுப்பசொனிக்' தாக்குதலில் படுகாயமுற்ற மகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியவர் அடுத்து வந்த புக்காரா குண்டு வீச்சுக்கு உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், மே 23

நேற்றுக் காலை 'சுப்பசொனிக்' விமானம் நடத்திய குண்டு வீச்சில் படுகாயமுற்ற மகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்த தந்தை, அடுத்துவந்த புக்காராவின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் மனைவியான சின்னத்தம்பி சிவகாமி இந்த சோக சம்பவம் பற்றி வேதனையுடன் எடுத்துரைத்தார்.

அவர் கூறியதாவது:-

இன்று காலை நித்திரை விட்டெழுந்த எனது மகள் "ரியூசனுக்குப் போக நேரம் போச்சுது அம்மா என்னை ஏன் எழுப்பவில்லை என்று கேட்டவாறு அவசர அவசரமாக புறப்படத் தயாரானார்.

தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த நான், தேநீரைக் குடித்துவிட்டுச் செல்லும்படி மகளிடம் கூற அவர் "பிறகு வாறன்" என்று கூறியவாறு கிணற்றடிக்குச் சென்றார்.

கிணற்றடியில் நீர் இறைக்கும் இயந்திரம் நீரிறைத்துக் கொண்டிருந்தது. என் கணவர் வாழைக்கு நீர்ப் பாய்ச்சிக் கொண்டிருந்தார்.

திடீரென பேரிரைச்சல் கேட்டது. நான் குசினியிலிருந்து கிணற்றடியில் நின்ற மகளை நோக்கி ஓடினேன். அப்போது 'சுப்பசொனிக்' வீசிய குண்டு கள் பெரும் சத்தத்துடன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 'நரோமா' பயணி சேவைக்கு இணைப்புக் கப்பல் இல்லை

யாழ்ப்பாணம், மே 23

நரோமா கப்பல் சேவை இன்று நடைபெறுமா என்பது குறித்து உறுதிப்படுத்தப் பட்ட தகவல் எதுவும் நேற்று மாலை வரை இங்கு கிடைக்கவில்லை என்று யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

நரோமா பயணிகளுக்கு பருத்தித்துறைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே இணைப்பு சேவை வழங்க தற்சமயம் கப்பல் எதுவும் இல்லாததால் "நரோமா" சேவை இன்று நடைபெற மாட்டாது என்றே எதிர் பார்க்கப்படுகிறது.

இதேவேளை—

நரோமா கப்பல் திருமலையில் இருந்து நேரே பருத்தித்துறைக்கு வந்து சேவையில் ஈடுபட கொழும்பில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினருடன் இது தொடர்பாக பேச்சு நடத்த இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை - இராணுவம் மட்டக்களப்பில் முறுகல்!

யாழ்ப்பாணம், மே 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள பொலீஸ் அதிரடிப்படையினருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

எல்லைப் புறங்களில் உள்ள முகாம்களுக்கு இராணுவத்தை செல்லுமாறும்—

மாறாக [illegible] உள்ள முகாம்களில் [illegible] கடமை புரி[illegible] பொலீஸ் அதிரடிப்படைத் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

எல்லைப் புறங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அதிகம் இடம் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதால் அதிரடிப் படையினரின் கோரிக்கை இராணுவத் தரப்பில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக இராணுவ அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு எல்லைப் [illegible] (உ-3)

## எவரின் எதிர்பார்ப்புக்கும் குந்தகமாக இருக்கமாட்டேன்

### காமினி சொல்கிறார்

கொழும்பு, மே 23

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள எவரினது எதிர்பார்ப்புகளுக்கும் குந்தகமாக இருந்து பிரச்சினைக்குரியவனாக மாட்டேன்.

அதற்கு மாறாக, கட்சியில் உள்ள ஆற்றல் மிகுந்த எவருக்கும் அவர் தமது எதிர்பார்ப்புகளை அடைவதற்கு உதவுவேன்; ஒத்துழைப்பேன்.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கடந்த வாரம் எம்.பியாக பதவியேற்ற திரு. காமினி திஸநாயக்கா.

பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாம் விரும்பி ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறவில்லை. புனிதமான ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்க விரும்பினோம். — ஐக்கிய தேசியக் கட்சி நாங்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக இடைத் தேர்தல்கள்: பிரசாரம் உச்சக் கட்டத்தில்!

சென்னை, மே 23

தமிழ்நாட்டில் மயிலாப்பூர் மற்றும் பெருந்துறை சட்டசபைத் தொகுதிகளுக்காக எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் பிரசாரம் சூடு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது.

இத்தேர்தல் குறித்து பிரபல எழுத்தாளரும் இந்தியா டுடேயின் தமிழ்ப் பதிப்பு ஆசிரியருமான வாஸந்தி தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

கடந்த பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. வென்ற தொகுதி மயிலாப்பூர். என்றாலும், அ.தி.மு.க. மெத்தனமாக இல்லை. முதலமைச்சர் ஜெயலலிதா தெருத் தெருவாக தனது குண்டு துளைக்காத வாகனத்தில் அமர்ந்தபடி அ.தி.மு.க. வேட்பாளருக்காகப் பிரசாரஞ் செய்கிறார்.

கருணாநிதி ம. வை. கோபாலசாமிக்கும் இந்த இடைத்தேர்தல் வியாசாரம் ஒரு தன்மானப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது.

பெருந்துறை, மயிலாப்பூர் இடைத்தேர்தல் முடிவுகள் தமிழகத்தில் எதிர்கால அரசியல் போக்கு எப்படி இருக்கப் போகிறது என்பதை சூசகமாக விளக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மக்களுக்கு எல்லாமே அலுத்து விட்டது. இளைஞர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்வாய் வடக்கு

# அருள்மிகு அரசடி விநாயகர் ஆலய

## புதிய தேர் வெள்ளோட்டமும் இரதோற்சவமும் - சிறப்பு மலர்

23 - 05 - 1994

# நாடாளுநாயகனாக தேரேறி அருள் புரியும்

# அல்வாய் அரசடி விநாயகப் பெருமான்!

ஒவ்வொரு ஊருக்கும் அங்கு அமைந்துள்ள கோவிலுக்கும் சிறப்பும், பெருமையும் தருவன அங்கு நடைபெறும் விழாக்களே ஆகும். நித்திய நைமித்திய காமிய விழாக்கள் உரிய விதிப்படி கோவிலில் நடத்தப்படும் போது அதன் பலாபலனை ஊர் மக்கள் பெறுகின்றார்கள் இதனால் ஊர்ச் சிறப்பு, கோவில் சிறப்பு உயர்வடைந்து செல்ல மக்கள் பக்தி மேலும் மேலோங்கி செல்கிறது. இவ்வாலய அலங்காரத் திருவிழா வைகாசி மாதம் பூர்வ பட்ச ஐந்தாம் நாள் ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறுகிறது. எட்டாம் நாள் வேட்டைத் திருவிழாவும், ஒன்பதாம் நாள் இரதோற்சவமும், பத்தாம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெற்று வருகிறது. நிகழும் உற்சவத்தின் இன்றைய இரதோற்சவ நாளில் புதிய தேர் ஏறி வரும் எம்பெருமானின் காட்சியானது அல்லல் போக்க கிடைக்கப் பெற்ற பேறாகும்.

ஆலய திருவிழாக்களில் மிக உயர் இடம் வகிப்பது இரதோற்சவமாகும். நாம் முதலில் பிரணவ சொரூபியான விநாயகப் பெருமானுக்கு முதன்மை கொடுப்பதை உள்ளத்தோடு இணைந்த பக்தி சிரத்தையாக கொள்கிறோம். அல்வாய் ஊரின் மத்தியில் அமைந்த அரசடி விநாயகன் புதிய தேரேறி வரும் இக்காட்சி பார்ப்போர் மனதில் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தி அழுது அழுது தொழுகின்ற அடியாரின் துன்பத்தை போக்குகின்றது. நாம் எடுத்த காரியங்களில் வெற்றி பெற, முதலோனாய் நிற்கும் விநாயகன் துணை புரிந்து அல்லல் அறுப்பான் என்ற நம்பிக்கையோடு செயற்படும் போது எமது காரியங்கள் சித்திக்கின்றன.

இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன் இருந்து எம் முன்னோர்கள் மேற்கொண்டு வந்த இவ் ஆலய வழிபாடு படிப்படியான வளர்ச்சிப் போக்கில் கோவில் சிறப்புக்களை ஒழுங்கே அமையப் பெற்ற அருள்மிகு அரசடி விநாயகர் ஆலயம் மூலமூர்த்தியாக விநாயகனை கொண்டு அமைந்துள்ளது. அத்துடன் இந்த ஆலயத்தில் முருகன், நந்தகோபாலர், வைரவர், அம்மன், சண்டேசுவரர் ஆகிய பரிவார மூர்த்திகளும் அமைத்து வழிபாடு சிறப்புற மேற்கொள்ளப்பட்டு வருகிறது ஆகமத்தோடு இறை வழிபாடு ஆகம முறைப்படி மேற்கொள்ள, வேண்டிய ஆலய தேவைகள், கட்டடங்கள், பொருள்கள் மக்கள் தாராள உதவியால் கிடைக்கப்பெற்று வருவது எம்பெருமான் மீது பக்தர் கொண்ட அன்பின் வெளிப்பாடே ஆகும்.

அல்லல் தீர்க்கும் எம்பெருமானை வேண்டி வழிபாடு செய்து ஒத்துழைப்பு நல்கும் அடியார்களின் தாராள மனம் விரிவடைந்து செல்ல, இங்கு நடைபெறும் விசேட தினங்களில் பக்தர்கள் ஆற்றும் அனுட்டானங்களும் காரணம் எனலாம்.

ஆலயத்தில் உள்ள மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகள் ஆகியவற்றின் விழாக்களாக தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம், சித்திரைப் பூரணை, வைகாசி விசாகம், ஆனி உத்திரம், ஆடிப் பூரம், ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதி நவராத்திரி, கந்தஷஷ்டி, கார்த்திகை விநாயக ஷஷ்டி, மார்கழி திருவெம்பாவை என்பன அனுஷ்டிக்கப்பட்டு வருவது சிறப்புக்களை தருவதாக உள்ளது.

அலங்கார உற்சவத்தின் இரதோற்சவ நாளான இன்று யாழ்ப்பாணம் அரியாலையூர் விஸ்வதர்ம குல வல்லிபுரம் தர்மலிங்கம் ஆச்சாரியார் அவர்களால் நிர்மாணிக்கப் பட்ட புதிய தேர் சித்திரத் தேரினை பிரதிபலிப்பதான வடிவில், சிற்பம்சம் முழுமையும் பொருந்தியதாக அழகு தோற்றம் கொண்ட வகையில் அமைந்தமை ஆச்சாரியார் அவர்களின் கைத்திறனை வெளிக்காட்டுவதாக உள்ளது. ஆச்சாரியார் அவர்கள் குறுகிய காலத்தில் சிறப்புற அமைத்தமை குறித்து ஆலய பரிபாலன சபையால் பாராட்டப்பட்டு பொன்னாடை போர்த்தி இன்றைய நாளில் கௌரவிக்கப்படுகின்றார். அத்துடன் இத்தேரினை அல்வாய் வடக்கில் பிறந்து தற்போது அரியாலையில் வாழ்ந்து வரும் பெருந்தகை திரு. க. கதிரவேல் அவர்கள் தனது தனிப்பட்ட செலவில் உருவாக்கம் செய்வித்து எமது திருத்தலத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளார். அவர்களும் அவர்களது குடும்பமும் அரசடி விநாயகரின் இஷ்டசித்திகளையும் பெற்று உய்யுமாறு எம்பெருமானை வேண்டிக் கொள்கின்றோம்.

தேர்த்திருவிழாவான இன்று எம்பெருமான் அலங்கார பூஜிதனாக ராஜகம்பீர நாடாளு நாயகனாக, அணி பணிகளேந்திய அற்புத திருக்கோலத்தில் திகழப் பெற்று, இவ்வூர் மக்கள் பரந்து வாழப் பெற்று இருந்தாலும் இத்தினத்தில் எம்பெருமான் அருள் வேண்டி பக்தி சூழ நாடி வந்து அருள் கேட்கும் பக்தர் குழாம் புடைசூழ, ஊரின் நாலாபுறத்திலும் இருந்து வந்து பக்தர் நாத ஒலி, கீத ஒலி, வேத ஒலி முழங்க ஆடி ஆடி பெருமான் பவனி வருவது மக்கள் உள்ளத்தை உருக்கும் பக்தி நிறைந்த பேறாகும்.

பசிப்பிணி, பஞ்சம், துன்பம், துயர் ஆகிய பிறவிப் பிணியில் இருந்து விடுபட, துயர் துடைக்கும் இறைவன் தேரேறி வருகின்றான் என்பது தேர் திருவிழாவின் தத்துவமாக குறிப்பிடப்படுகிறது.

புதிய தேரேறி வரும் இந்நாளில் விநாயகர் அருள் கிடைக்கப் பெற்று உய்ய அழுது அழுது தொழுது துன்பம் நீங்கவும், இன்பம் சூழவும் வேண்டுவோம், விக்கினம் தீர்க்கும் விநாயகரும்.

நாட்டில் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் கிடைக்கப் பெற்று வாழ அருள் பாலிக்க வேண்டுவோமாக. ★

பரிபாலன சபையினர்,
அரசடி விநாகர் ஆலயம், அல்வாய் வடக்கு.

### நிகழ்ச்சி நிரல்

புதிய தேர் வெள்ளோட்டம் — காலை 6-45 மணி
இரததோற்சவம் வீதிவலம்வருதல் — மு ப. 10.00 மணி

## ஆசிச்செய்தி

அல்வாய் வடக்கு அருள்மிகு அரசடிப்பிள்ளையார் கோயில் வெள்ளோட்டம் இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். இறைவனை வழுத்தா நாவும் தொழாத கைகளாலும் யாது பயன்? வினைதீர்க்கும் விநாயகன் புதிய தேரில் ஏறி ஆரோகணித்து வருவதை தேரில் பல பக்தர்கள் கண்டு தரிசித்து பயன் அடையும் இவ்வேளையில் யான் எம்பெருமானுடைய திருவடியில் வணங்கி எம்மனோர்க்கு சகல செல்வங்களும் கிடைக்க அருளுவாராக!

இறைதொண்டில்,
சுவாமி சித்ரூபானந்தா

ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமம்,
பருத்தித்துறை

சமய வழிபாடு எமது வாழ்க்கையோடு இணைந்தது சைவர்களாகிய நாம் எமது இம்மை மறுமை பலன்களைப் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

''கணபதி பூசை கைமேல் பலன்'' என்பார்கள் எக்காலத்திற்கும் மிகவும் எளிய முறையில் விநாயக வணக்கத்தை மேற்கொண்டு வரும் சைவர்கள் சகல சித்திகளையும் பெற்று வருவதைக் காண்கின்றோம். இந்த வகையில் அல்வாய் வடக்கு விநாயகராலயத்தில் இன்று புதிய சித்திர அமைப்பிலான தேரில் விநாயகப் பெருமான் வலம் வருவது மகிழ்ச்சிக்குரிய பேறாகும் விநாயகப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் வழங்கி நிற்கின்றேன்.

ஆறுமுகம்சுவாமி - சிவசுவாமி -
பிரதேச செயலரும், மேலதிக அரசாங்க அதிபரும்,
பருத்தித்துறை,


எல்லாம் வல்ல விநாயகர் அருள் மலர
வாழ்த்துகின்றோம்

**ஆனந்தா ரேட்ஸ்**
(சைக்கிள், றேடியோ உதிரிப் பாகங்கள் விற்பனையாளர்)
நாவலடி, அல்வாய்.

**கணேஷா வர்த்தக நிலையம்**
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**கிருஷ்ணாஸ் புடைவையகம்**
பிரதான வீதி, நெல்லியடி.

**ஆனைமுகன் புடைவை மாளிகை**
நெல்லியடி, கரவெட்டி.

**சிமாட் ரெயிலறிங்**
யாழ். பிரதான வீதி, நெல்லியடி.

**சரவணாஸ் புடைவையகம்**
நெல்லியடி.

**ஹப்பி ரெக்ஸைரல்**
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**குமுதினி ஸ்ரோஸ்**
இல 04, நவீன சந்தை, நெல்லியடி.

**சிவலிங்கம் வெற்றிலைக் கடை**
நவீன சந்தை, நெல்லியடி.

**சந்துஜன்ஸ் பான்ஸி குட்ஸ்**
ம. ம. வி. வீதி, நெல்லியடி.

**ஈஸ்வரி நகையகம்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

**சோதி வாணிபம்**
புதிய சந்தை, பருத்தித்துறை.

அல்வாய் வடக்கு
**நக்கீரன் சனசமூக நிலையம்**
குச்சம் வைரவர் ஆலய பரிபாலன சபையினர்.

**துவாரகா ஸ்ரோஸ்**
மாறாம்பலம், அல்வாய் மேற்கு.

**கலாஞ்சலி சோதிட நிலையம்**
சோதிடர் ம. சிவகுருநாதன்
அல்வாய்

**வாணி நகை மாளிகை**
பிரதான வீதி, பருத்தித்துறை.

**திரு வீடியோ விஷன்**
&
கலர் படப்பிடிப்பாளர்
மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய் தெற்கு.


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
### 23-05-94
### செல்வன் குணேந்திரன் சிவேந்திரன்

நல்லூரிலுள்ள சண்முகராஜா இல்லத்தைச் சேர்ந்த குணேந்திரன் - சிவகௌரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிவேந்திரன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று அவரது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பம்மாமார், அப்பப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், உற்றார், உறவினர்கள் பல்கலையும் கற்று, நீடுழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

''சண்முகராஜா'',
400, கோயில் வீதி,
நல்லூர். (31043)

## மெடி குயிக் ஆய்வுகூடம்

கே. கே. எஸ். வீதி, சுன்னாகத்தில் இயங்கி வந்த மேற்படி ஆய்வு கூடம் 23-05-94 இன்று தொடக்கம் யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, இல- 518 விக்னா பார்மஸியில் இயங்கும் என்பதனையும் சுன்னாகம் ஆய்வு கூடம் தொடர்ந்து சேகரிப்பு நிலையமாக (Collecting Centre) காலை 7.00 மணி தொடக்கம் காலை 9.00 மணி வரை இயங்கும் என்பதையும் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

அ. சுந்தரலிங்கம்
ஆய்வுகூடப் பரிசோதகர்
(31054)

## இன்று

தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினரால் சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பில் சேர விரும்பும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள படித்த இளம் பெண்கள் இன்று திங்கட்கிழமைக்கு முன்னர் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-117)

★ ★ ★

தாளையடி, மே 23
யாழ் கத்தோலிக்க மறை மாவட்டமும், செம்பியன்பற்று இறை மக்களும் இணைந்து நடத்தும் ''விவிலிய கண்காட்சி'' இன்றும் நாளை செவ்வாயும் செம்பியன்பற்று றோ. க. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-144)

## அமரர் எம். ஏ. கந்தையா (ஆசிரியர்)

24-04-1994இல் அமரத்துவம் எய்திய எமது ஆசான் அமரர் எம். ஏ. கந்தையா அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

யா/விக்ரோறியாக் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்லூரி அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(31019)

## பயிலுநர் ஆசிரியர் சேவை

போட்டிப் பரீட்சைக்கான
பயிற்சி வகுப்புகள்
திங்கள், புதன், வெள்ளி தினங்களில்
4-00 — 5-30

பாடங்கள்:
பொது அறிவு
பொது விவேகம்

**ஆரம்பம்: 25-05-94**
4-00 மணி
முழுக்கட்டணம் 200/-

மேலும் விவரங்களுக்கு:
**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd CROSS STREET
JAFFNA.
(சி-8311)

## கண்ணீர் அஞ்சலி

தமிழ் ஈழத்தின் இதய ஒலியை உலகெலாம் ஒலிக்கச் செய்த மேதையின் இதய ஒலி ஓய்ந்தது சுருதி தணிந்தது.

அமரத்துவம் எய்திய பிரபல இலத்திரனியல் ஒலிப்பதிவு நிபுணர்

**''நித்தி''**
(சு. நித்தியானந்தன்)

அவர்களை இழந்து துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்
யாழ்ப்பாணம்.

## நாளை

யாழ்ப்பாணம், மே 23
நல்லூர் மூத்த விநாயகர் ச. ச. நிலையத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு நாளையொட்டி கலை நிகழ்ச்சிகள் நாளையும் நாளை மறுதினம் புதன்கிழமையும் நிலைய முன்றலில் நடைபெறும். (எ-5-111)

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் சாவகச்சேரிப் பிரிவு நடத்தும் — 1994 ஆம் ஆண்டு ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் — மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளையும் மறுதினமும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறும். (உ-17)

## கண்ணீர் அஞ்சலி

### சிவதர்சினி சின்னத்தம்பி
### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
### புஷ்பராணி கணபதிப்பிள்ளை

இனவாத அரசின் கோரத்தாண்டவத்தால் 22-05-94 அன்று எம்மைப் பிரிந்த எம் சோதரிக்கும் அவர் தந்தை, மைத்துனி ஆகியோருக்கும் எம் இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர் பிரிவால் வாடும் தாய், சோதரர் மற்றும் உற்றார், உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

95 கணிதப்பிரிவு, ஆசிரியர்களும், மாணவர்களும்.
யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

சரந்தன் சந்தி,
நீர்வேலி, (சி/8313)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள்
[தலைவர், வலி. கி. தெ. ப. ப. நோ. கூ. ச. நீர்வேலி

கூட்டுறவின் தத்துவம் உணர்ந்த தலைவா கொடுமதியர் செயலால் நேற்றிருந்தீர் இன்றில்லீர் சங்கத்தால் வாழாது சமூகத்துக்காக என்றும் மின்னாது முழங்காது ஏற்பட்ட கொடுமை கண்டு கதறுகிறோம் கண்ணீர் அஞ்சலியை காணிக்கை ஆக்குகிறோம்.

துயர்தனில் துவளும்
கிளைக்குழு உறுப்பினர்கள்,
கூட்டுறவு ஊழியர்

வலி. கி. தெ. ப. ப. நோ. கூ. சங்கம்,
நீர்வேலி. (31050)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

## இரதோற்சவ விழா சிறப்பு மலர் (23 - 05 - 94)

### ஆசியுரை

யாழ். குடாநாட்டிலே மாருதப் புரவீகவல்லியால் அமைக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களுள் நடுநாயகமாய் அமைந்திருப்பது அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயமாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கும்பழாவளை விநாயகப் பெருமான் சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரப் பெருமானோடும், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமானோடும் தேரில் பவனி வந்து தன் அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் தேர்த்திருவிழா இன்றைய தினமாகும்.

ஓவியக் கோயிலில் காவியக் கருவாக அமைந்து அருள் பாலிக்கும் விக்கினேஸ்வரப் பெருமானின் திருவருளால் மக்கள் எல்லோரும் சகல விஜய சௌபாக்கியங்களும் பெற்று நல் வாழ்வு வாழ எல்லாம் வல்ல கும்பழாவளையானை இறைஞ்சுகிறேன்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து,
சுபமஸ்து.

இ, சோமசுந்தரேஸ்வரக்குருக்கள்.
ஈசான சிவாச்சாரியார்,
ஆலய பிரதமகுரு.

### வாழ்த்துரை

கருணை என்னும் வெள்ள மதம் பொழிந்து அடியார்கள் வேண்டிய வேண்டிய வரங்களை எல்லாம் ஈந்து, அருளே உருவாய் அமைந்து அருள் பாலிக்கும் கும்பழாவளையான் தேரேறி பவனி வரும் காட்சியைக் காணாத கண் என்ன கண்ணே? அவன் புகழ் கேளாத செவி என்ன செவியே? அவனை வணங்காத தலை என்ன தலையே!

"எங்கும் அவனது திருவருள் பொலிக"

—தொண்டர்சபை,

### வாழ்த்துரை

அளவையூர் மக்கள் அனைவரையும் காப்பாற்றி வரும் அளவையம்பதி கும்பழாவளை விநாயகப் பெருமான் இன்று தம் அம்மை அப்பனுடன் தம்பி முருகன் சக்திகள் சமேதராக அடியார்கள் புடை சூழ, அன்பர்கள் அரோகரா ஒலியுடன் பண்ணிசைக்க மங்கள இசை வானைத்தொட அந்தணப் பெருமக்கள் வேதமோத, ஆடி அசைந்து இரதமூர்ந்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

அடியேம், எம்மக்களின் நலன் வேண்டி எம் பெருமான் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

—தர்மகர்த்தாக்கள் சபையினர்.

## மாருதப்புரவீகவல்லியின் குறை நீக்கிய கும்பழாவளை விநாயகப் பெருமான்

அளவெட்டிக் கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற மூர்த்தி தலம் தீர்த்த மகிமைபெற்ற புண்ணிய ஸ்தலமாக இவ்வாலயம் விளங்குகின்றது.

பூர்வீகத்தில் மாருதப்புரவீகவல்லி என்னும் பெயரிலான சோழ அரசிளங்குமாரி குதிரை முகமுடையவளாய்க் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்தாள். அவள் குதிரை முகமும் குஷ்டரோகமும் நீங்குதற்பொருட்டு பல சிகிச்சைகள் பெற்றாள்; தெய்வ வழிபாட்டிலும் ஈடுபட்டாள். இவற்றினால் அக்குறைபாடுகள் தீராமைகண்டு தவசிரேஷ்டர் ஒருவரின் வாக்குப்பிரகாரம் யாழ்ப்பாணத்தின் வடகரையிலுள்ள திவ்ய தீர்த்தமான கீரிமலையில் கந்தசாமி உபாசனையுடன் தீர்த்தமாடி, ஒரே நிரையில் மாவிட்டபுரம் முதலாக தென்திசை நோக்கி ஐந்து கோயில்களில் கந்த



சுவாமி விக்கிரக ஆராதனை செய்து தனது நோயும் குதிரை முகமும் நீங்கப்பெற்றாள்.

குறித்த குதிரை முகம் பிறர் பார்வைக்கு நீங்கியதன்றி இராஜகுமாரியின் சொந்த நினைவிற்கும் பார்வைக்கும் நீங்கப்பெறவில்லை. இது பற்றி ஆராய்ந்தவிடத்து, கந்தசாமி வழிபாட்டுக்கு முன் விக்னேஸ்வர ஆராதனை செய்யாமையே இதற்குக் காரணம் என தவசிரேஷ்டர் கூறக் கேட்ட இளவரசி, தன் பிழைக்கு மனம் நொந்து, விக்கினேஸ்வரரைத் தியானித்து, தான் செய்த பிழைக்கு பிராயச் சித்தமாக ஏழு ஸ்தானங்களில் விக்னேஸ்வர ஸ்தாபனம் செய்தாள். அத்தலங்களாவன; கொல்லன்கலட்டி, வரத்தலை, அளகொல்லை, கும்பளாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பனவாகும்.

இவைகளுள் மத்திய ஸ்தானமாயுள்ள கும்பழாவளையில் விக்னேஸ்வரப் பிரதிட்டை முடியவே குமாரத்தியின் குதிரை முகச்சாயை அவளது சாந்தப் பார்வைக்கும் முற்றாக நீங்கியது.

இச்சரித்திர உண்மை இவ்வாலய முன்றிற் சோலைக்கு மாவிழிதிட்டி (மா — இழி + திட்டி) எனவும்—

இத்தலத்தின் தென்கிழக்கு மூலையில் இருக்கும் வயல் (இது முன் குளமாய்இருந்தது) குமாரத்திகுளம் எனவும்—

குதிரை முகம் முற்றாக நீங்கிய பின் ஸ்தாபித்த இதனையடுத்த தென் தலத்துக்கு "பெருமாக்கடவை" (பெரு+மா—கடவை) எனவும் பெயர்கள் இருப்பதனால் அறியலாம்.

இப்பெருமானின் அருட் பிரசாதம் பெற்ற அடியார்கள் பலர் இப்பெருமான் மீது பல பாடல்களை இயற்றியுள்ளனர். இராமர் வேதாரணியரின் மூதாதை ஒருவர் கட்டளைக் கலித்துறை ரூபமாய் அமைந்த தோத்திரப் பாடல்களும், அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களும், சைவப் பெரியார் திரு. வை. க. சிற்றம்பலம் அவர்களும் இப்பெருமான் மீது தோத்திரப் பாடல்கள் பாடியுள்ளனர்.

தற்போது இவ்வாலயம் உன்னத வளர்ச்சி பெற்று யாழ். குடாநாட்டில் உள்ள பிரபல தலங்களில் ஒன்றாக விளங்குவது இங்கு வருகை தரும் அடியார்கள் அறிந்த உண்மையாகும். இவ்வாலயத்தில் அமைந்திருக்கும் தீர்த்தக் கேணி, மண்டபம், தேர் முட்டி, தேர்க்கொட்டகை, விநாயகரின் 32 தோற்றப் படங்கள் என்பன பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்துவன. ஒவ்வொருவருடமும் வைகாசி மாதத்தில் வரும் பூரணை தினத்தன்று தீர்த்தமுடி, முதல் நாள் இரதோற்சவமும் நடைபெறும். ★

### உ
### அடியேங்கள் அல்லலை தீர்த்தருள்வாய்

மின்பரவு சடையோனும் உமையு மொரு தேரில் வர
விண்ணவர் சிறையறுத்த
வேல்முருகன் வள்ளிகுஞ் சரியோடு வண்ணங்கள்
மிளிர்தங்கத் தேர்மிசை வர
பொன்பெருகு முடிமரை புகழ்பெருகு குழையசைய
டனித முகம் கருணை பொழிய
பூணூலும் பெருவயிறும் பூமாலை புனைதோளும்
பொங்குகட மாரிபும் கரமும்
இன்பமழை சொரியமணி இரதத்தி லேறிவரும்
ஏரம்பா ஞானக் கொம்பா
இழிமா முகத்துமா ருதவல்லி நோய் தீர்த்த
எந்தையே தந்திமுகனே
அன்பர்மனத் தேயுறையும் அழகனே அடியேங்கள்
அல்லலைத் தீர்த்தருள்வாய்
அளவையம் பதியிலே கும்பழா வளைமேவும்
அருள் விநா யகமூர்த்தியே.

அருட்கவி
சீ. விநாசித்தம்பி

## இன்றைய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| அபிஷேகம் | — காலை 6-30 மணி |
| பூசை | — காலை 7-00 மணி |
| தம்பபூசை | — காலை 7-30 மணி |
| வசந்த மண்டபப் பூசை | — காலை 8-00 மணி |
| பண்ணிசை | — காலை 11-00 — பி.ப. 2-00 |
| பஞ்சமுக அர்ச்சனை (தேர் மண்டபத்தில்) | — பிற்பகல் 2-00 மணி |
| மூர்த்திகள் ஆலயத்துக்கு எழுந்தருளல் | — பிற்பகல் 3-30 மணி |

ஆசியுரை அருட்கவி சீ. விநாசித்தம்பி,

பண்ணிசை

| | | |
|---|---|---|
| திரு. வி. சிவஞானசேகரம் | முற்பகல் | 11-00—11-20 |
| திரு. சி. சிவஞானராசா | முற்பகல் | 11-20—11-40 |
| செல்வி இ. விஜயலட்சுமி | முற்பகல் | 11-40—12-00 |
| திருமதி வி. நாகேஸ்வரன் | மதியம் | 12-00—12-20 |
| திரு. சி. பாலச்சந்திரன் | பிற்பகல் | 12-20—12-40 |
| திரு. வி. சிவானந்தராசா | பிற்பகல் | 12-40— 1-00 |
| திரு. ச. நித்தியானந்தன் | பிற்பகல் | 1-00— 1-20 |
| திருவாளர்கள் ந. இராமர், இலட்சுமணன் | பிற்பகல் | 1-20— 1-40 |
| திரு. க. நடராசா | பிற்பகல் | 1-40— 2-00 |

விளம்பர அன்பளிப்பு:
ம. பத்மநாத்
மிதிவண்டி உதிரிப்பாக விற்பனையாளர்
இல 230, K. K. S. Road,
சுன்னாகம்.

தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்
********************

23 - 05 - 1994 முதல்
பணியைத் தொடங்குகிறது
********************

தமிழரின் முதலீட்டினால் தமிழீழத்தில் உருவாகும் ஒரே வைப்பகம்
★ தமிழீழ வைப்பகம் ★
அதுவே தமிழீழ மக்களின் சிறப்பான காப்பகம்
● உங்கள் பணிக்கென உருவான வைப்பகம்
● தேவையின் போது தோள்தரும் தோழனாக
● கைதந்து உதவவரும் மெய்யான பணியாளனாக
"தமிழீழ வைப்பகம்"
◎ நடைமுறைக் கணக்கு ◎ தேட்டக் (சேமிப்பு) கணக்கு
◎ நிலையான வைப்புக் கணக்கு
◎ மேம்பாட்டுக் கடன் ◎ அடகுக் கடன் ◎ வாணிபக்கடன்
இத்தனை திட்டங்களும் உங்களுக்காகவே
வைப்புக்கு உயர் வட்டி வழங்கி
வளர்ச்சிப்பணி கருதி எளிய கடன் வழங்கி மக்களின் தோழனாய் மலர்கின்ற வைப்பகம்
'தமிழீழ வைப்பகம்'
மேலும் விளக்கங்கள் பெற எமது பணியகத்தை நாடுங்கள்:
தமிழீழ வைப்பகம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
[விளம்பர இல: வி-8805]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒஸ்ரின் போம் காருக்கு பொடக் கூடிய நான்கு 5-90-14 வெள்ளைக்கோடு ரயரும், ரியூப்பும், கேம்பிறிச் காருக்குரிய நான்கு 5-60-15 கனவி ரயரும், ரியூப்பும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பெரிய தம்பி சைக்கிள் வேக்ஸ், V. C. அருகாமையில் சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. (31010)

## கோழிக்குஞ்சு விற்பனை

சிவப்பு, சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. "மல்லிகா பதி", மானிப்பாய். (30977)

## உடன் தேவை

பாண் தயாரிப்பில் விசேட தேர்ச்சி பெற்ற ஒருவர் தேவை. பாஸ் — முன்பு வேலை செய்த வெதுப்பகத்தில் இருந்து கடிதம் பெற்று வரவும். சம்பளம் வேலைத் திறமையைப் பொறுத்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: சோதி வெதுப்பகம், பொற்பதிவீதி கொக்குவில் கிழக்கு. (30996)

குருநகரில் முன்னணியில் இருக்கும் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றுக்கு இளம் சிகை அலங்கரிப்பாளர் (தொழில் திறமையுள்ள) உடன் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். மயூரா சிகை அலங்கரிப்பு நிலையம், கடற்கரை வீதி, (ஆஸ்பத்திரிக்கு முன்பாக), குருநகர், யாழ்ப்பாணம். (சி-8301)

## ACCOUNTANCY

G.C.E. A/L Past Question 20 பரீட்சைகளின் வினாக்கள் 27 அலகுகளை உள்ளடக்கியது. 1980 — 1993 வரை வங்கி கணக்கு கூற்று, கட்டு நிகழ்ச்சி ஒற்றைப் பதிவு, சில்லறை காசேடு, பங்கு வழங்கல், இன்னும் பல. விலை 60/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் பொத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8212)

## தேவை

நல்ல நிலையில் உள்ள TVS மொபெட் மோட்டார் சைக்கிள் தேவை. தொடர்பு: எஸ். பி. சிவஞானம், சட்டத்தரணி, இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (7201)

## மணமகள் தேவை

ரேவதி 8 பாவம், 30 வயது, பொருளாதாரமும் தொழிற் கல்வியுடன் வாழ். கம்பனி ஒன்றில் வேலை செய்பவருக்கு 30 வயதுக்குட்பட்ட பெண் தேவை. தொடர்பு: த. இராமநாதன், பென்சனியர், புளியநாதன் வீதி, இணுவில் மேற்கு, இணுவில். (7100)

லண்டனில் உத்தியோகம் பார்க்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரஜாவுரிமையுள்ள கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம் அவிட்டம். விவரங்களுக்கு பொன். பாலசிங்கம், 25, நக்கா வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (31027)

## மணமக்களே!

உங்கள் திருமணத்திற்கான சிறந்த அழைப்பிதழ்களைத் தெரிவு செய்திட வாரீர். ஆனந்தன் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (30975)

## திருமண சேவை

உள்நாடு, வெளிநாடு, ஆண், பெண் ஜாதகம் உள்ளவர்கள் உடனடியாக எம்மிடம் தொடர்புகொள்க: அபிராமி, துர்க்காதேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (30986)

## கர்நாடக சங்கீதம்

கைவேடு I ரூபா 10/- கைநூல் ரூபா 15/- 72 மேள கர்த்தா விளக்கம் ரூபா 5/-. மேற்படி பிரதிகள் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. (7395)

---

# திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## A/L 96

பௌதிகவியல்: திரு. கணேசன்

ஆரம்பம்: 23 - 05 - 94 (4 மணி)

## A/L 95

வெப்பவியல்:

ஆரம்பம்: 23 - 05 - 94 (5 மணி)

(சி/8222)

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

23 — 05 — 1994



தோற்றம்: 02 — 10 — 1947

மறைவு: 23 — 04 — 1994

## திருமதி நாகேஸ்வரி அம்பலவாணர்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 23 - 05 - 1994 காலை 4-00 மணிக்கு கீரிமலை தீர்த்தக் கரையிலும், பின்பு வீட்டுக்கிரியை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். வீட்டுக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எஸ். வீ. முருகேசு (தகப்பன்),
ஆ. அம்பலவாணர் (கணவர்).

46/4, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். (30935)

---

காரைநகர் - பாலாவோடை

# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் உற்சவம்

காரைநகர் - பாலாவோடை ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு 24 — 5 — 94 (வைகாசி 10 ஆம் திகதி) செவ்வாய்க்கிழமை கனிபுரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் கோயிலில் விசேஷ அபிஷேகமும் மேளக்கச்சேரியும் காலை 9-00 மணி தொடக்கம் 1-00 மணி வரை நடைபெறும்.

அடியார்களை இதில் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

-காரைநகர் வாழ் மக்கள்,

(30991)

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மணே நம:

# பூப்புனித நன்நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ ஸ்ரீ வைகாசி மீ 11ஆம் திகதி (25-05-94) புதன் காலை 8-00 மணி முதல் 9-00 மணி வரை வரும் சுபமங்கல நல்வோரையில்,

எமது புத்திரி
திருவளர் செல்வி

## வதனகீதாயினி (கீதா)

அவர்களுக்கு

பூப்புமங்கல நன்னீராட்டு சுபசாந்தி செய்ய நாம் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் சுற்றஞ்சூழ குடும்ப சகிதம் வருகைதந்து, மங்கல மகவினை ஆசீர்வதித்து மகிழும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்;
தங்கள் நல்வரவை நாடும்,
திரு. திருமதி க. மகாலிங்கம்
குடும்பத்தினர்.
ம. சுரேஸ் சகோதரர்கள்

16/3, சிவியர் லேன்,
கைட்டிப் பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (31008)

---

ஈச்சமோட்டை சன சமூக நிலைய

# 52ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு விளையாட்டு போட்டிகள்

1. மென்பந்து கிரிக்கெட் (7 பேர் 12 ஓவர்)
2. கரப்பந்தாட்டம் (ஓவர் கேம்)
3. கரப்பந்தாட்டம் (செட் அப் கேம்)

மேற்படி போட்டிகளின் விண்ணப்ப முடிவு திகதி 25-05-94 மாலை 6-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகள்:

✱ சச்சிதவநேசன்
40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

✱ கப்டன் D. A. M. குணசிங்கம்,
61, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(31045)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## செல்வி துரைசிங்கம் சுமதி

தோற்றம்: 27-12-1971

மறைவு: 02-06-1993

திதி: 23-05-1994

ஆண்டு ஒன்று சென்றாலும்
அழியாது உன் நினைவுகள்
ஆருயிரே உனை இழந்து
ஆறிடுமா எம் துயரம்
அன்பே உனை மறந்து
அலைகடலில் துரும்பாக
ஆடுகிறோம் உந்தன் நினைவில்
அணையாத தீபமென ஒளிர்வாய் என இருந்தோம்
அரும்பிலிலே கிள்ளிய எம்பெருமான்
செயலை என்னவென்போம்
மீண்டு வரும் பிறவியிலும் உறவாட உன்னுடன்
வேண்டுகிறோம் ஆண்டவனை - எம்
அருமைச் செல்வமே!

அன்பின் சுமதி!

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உங்கள் புன்சிரிப்பும், நீண்ட கருங்கூந்தலும் எமது நினைவை விட்டகலாது.

ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்;
அப்பா, அம்மா, சகோதரிகள்.

மயிலணி வீதி,
சுன்னாகம்.

---

# வீரவணக்கக்கூட்டம் ஒத்திவைப்பு

கோப்பாய் வட்டத்தில் அல்பேட் கலையரங்கில் இன்று திங்கள் மாலை நடைபெறவிருந்த மாவீரர் வீரவணக்கக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று நடைபெறமாட்டாது என்றும் —

அந்தக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி இரவு 7-30 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

## உணவு முத்திரைக்கு பொருள்கள்

வலைப் பிரதேச செயலகப் பிரிவில் வறுமை நிவாரண 9ஆம் சுட்ட உணவு முத்திரையின் 1ஆம் புள்ளிக்கான உலர் உணவுப் பொருள்கள் வச்சிலைப் பள்ளிப் ப. நோ. கூ. சங்க கிளைக் கடைகளில் கடந்த பத்தாம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகின்றது. (க-117)

---

# A/L 94

## கணக்கியல்

மாணவர்களின் நலன் கருதி பரீட்சையில் 45 புள்ளிகள் பெறத்தக்க வகையிலான வெளியீடுகள்:-

1) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (S. L. A. S.) (10 புள்ளிகள்)

✱ விற்பனையில் ✱

2) கம்பனி முடிவுக் கணக்குகள் (17½ புள்ளிகள்)

✱ வெகு விரைவில் விற்பனையில் ✱

3) பங்குடமை முடிவுக் கணக்குகள் (17½ புள்ளிகள்)

✱ வெகு விரைவில் விற்பனையில் ✱

ஆக்கியோன்:

**D. SAM**

(31036)


---

உ

தேரிலே வாறார்! தெருவீதி வாறார்!
அருளானந்தர் அருள் தர வாறார்!

# கந்தரோடை "கந்தன் கோயில்" அருள்மிகு ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார் ரதோற்சவம்

## இன்று 23-05-1994 திங்கட்கிழமை



சீர்பூத்த சோலை சிவம் பூக்க
கார்காத்த மூதூர் "கந்தன கோயில்"
அருள் பொலியும் எங்கள் அரனார் மைந்தன்
அருளானந்தன் ஆனைமுகன் அவனே துணை.

கீர்த்தனை: இராகம்: சாரங்கா தாளம்: ஆதி

பல்லவி

கந்தரோடை அருள் ஆனந்த நாயகனே
சுந்தர ரூபனே தொந்தி வயிற்றோனே (கந்த)

அனுபல்லவி

வந்த வினைகளெல்லாம் வாரி அறுப்பவனே
தந்த மறுப்பதனை தாங்கிடும் நாயகனே. (கந்த)

சரணம்

கந்தர் பதிதனில் சொந்தமாய் அமர்பவனே
வந்தடியார்க்கருள் வாரி வழங்குபவனே
சந்தமும் அறமும் சுகின்பெற அணிபவனே
சுந்தர ரூபனும் தேரில் உலாவுவதே.

வேதியர்க்கருளும் வேத விநாயகனே
வேதியர்க் கெல்லாம் வேதமுரைப்பவனே
சோதி வடிவான சோமசுந்தரன் மகனே
ஆதி அந்தமில்லா உனது காட்சி தந்தருள்வாயே! (கந்த)

ஆக்கம்: திருமுருகா

அருளானந்தப் பிள்ளையார் திருவருள் அடியார்கள்
அனைவருக்கும் கிடைக்க ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

**இ. சோமேஸ்வரசர்மா,**
தேவஸ்தான முதல்வர்.

கந்தரோடை,
23-05-1994. (சி-2092)

---

# மங்களகரமான திறப்பு விழா

இன்று (23-05-1994) திங்கட்கிழமை காலை 9-00மணிக்கு ஊறணி (வல்வெட்டித்துறை) மருத்துவமனை முன்பாக

மற்றுமோர்

# மருந்து - பால்மா வகைகள் (தனியார்) நிறுவனம்

எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை தமிழீழ மக்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்

## மருந்து - பால்மா வகைகள் (தனியார்) நிறுவனம்

★ சகல விதமான, ஆங்கில மருந்து வகைகள்
★ பால்மா வகைகள் மற்றும்
★ பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள்
என்பவற்றை நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

திறப்பு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது,
484, கேணல் கிட்டுசாலை,
யாழ்ப்பாணம்.

வில்லியம் ஹாவே தனியார் மருத்துவ மனை,
No. 17, கண்டி வீதி,
கண்டிக்குளி.

சஞ்சீவகரணி பார்மஸி,
பிரதான வீதி,
சித்தன்கேணி.

மூலிகை பார்மஸி,
பிரதான வீதி,
சங்கரத்தை; (வட்டுக்கோட்டை)

(31046)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
197/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அதே தவறை விடாதீர்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டவல்லுநர் குழு ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பிரஸ்தாப சட்டவல்லுநர் குழுவின் தலைவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் பிரபல சட்டவல்லுநருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஆவார்.

சுதந்திரக் கட்சியின் தற்போதைய பிரதான தலைவர்களில் ஒருவரும், உத்தேச ஜனாதிபதி வேட்பாளரும், மேல்மாகாண முதலமைச்சருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் பணிப்பின் பேரிலேயே இனப்பிரச்சினைக்குரிய தீர்வு யோசனை உருவாக்கப்பட உள்ளது.

சட்டவல்லுநர் குழு தயாரிக்கும் யோசனை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்படும் என்று திருமதி சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

தாம் பதவிக்கு வரும் பட்சத்தில் அந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்குப் பின்நிற்கமாட்டார் என்றும்— சந்திரிகா மேலும் உறுதி அளித்திருக்கிறார்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான யோசனை ஒன்றை எதிரணியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொண்டு, அதற்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். கடந்த பத்து வருடங்களில் இனப்பிரச்சினை கையாளப்பட்ட விதத்தில் இருந்து இது வித்தியாசமானது எனலாம்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் அனைத்துக் கட்சி மாநாடு, அரசியல் கட்சி மாநாடு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்று எத்தனையோ மாநாடுகள், கலந்தாலோசனைகள் நடந்தன. ஆனால் இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் தமது தீர்வு யோசனைகளை முன்வைத்ததும் இல்லை; தமது உண்மையான போக்கு என்ன என்பதனை மக்களுக்கு உத்தியோக பூர்வமாகவும் வெளிப்படையாகத் தெரிவித்ததும் இல்லை.

சிங்கள—பௌத்த பேரினவாதத்தின் செல்வாக்கும், தாம் தீர்வு யோசனையைத் தெரிவித்தால் அதனை வைத்து அடுத்த கட்சி சிங்கள மக்களிடம் அரசியல் லாபம் தேடிவிடும் என்ற அச்சமுமே இதற்குப் பிரதான காரணங்கள்.

ஆனால் இப்போது அந்த ஒளித்து விளையாடும் நடைமுறையைத் தொடர முடியாது. இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுந்த யுத்தம், அதில் ஏற்பட்ட தோல்விகள், அதன் பெறுபேறுகளின் அனுபவங்கள் என்பன சிங்கள மக்களின் மனநிலையை மாற்றிவிட்டன.

இனப்பிரச்சினைக்கு உங்கள் தீர்வு என்ன? — என்று தங்கள் அரசியல் கட்சிகளிடம் சிங்கள மக்கள் கேட்கும் புதிய நிலைப்பாடு தோன்றியுள்ளது. அதனால் எதிரணி மட்டுமல்ல, ஆளுங்கட்சியும் தனது தீர்வு யோசனையைத் தேர்தலின் போது மக்களுக்கு கூறவேண்டிய தேவை அத்தியாவசியமாகிவிட்டது!

ஆயினும்...

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை, சுதந்திர வேட்கையை, நிறைவேற்றக் கூடிய தீர்வை எந்தக் கட்சி முன்வைக்கப் போகிறது என்பதே கேள்விக்குரியதாகும்.

சுதந்திரக் கட்சியின் தீர்வு யோசனை தமிழ்க் கட்சிகளையும் கலந்தாலோசித்து உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. நல்லது. ஆனால் ஆளுங்கட்சி கடந்த நான்கு வருடங்களாகத் தொடர்ச்சியாக விடும் தவறை பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் போன்றவர்களும் இழைக்கமாட்டார்கள் என நம்புகிறோம். தங்கள் கட்சியைச் சேர்ந்த தெரிவுக் குழுவின் தலைவர் மங்களா வழியில் செல்லமாட்டார்கள் என நம்பலாமா? விடுதலைப் புலிகளைப் புறக்கணித்து, அவர்களைக் கலந்தாலோசிக்காது உருவாக்கப்படும் எந்த யோசனையும் பயன் தராது; நடைமுறைச் சாத்தியமுமாகாது என்பதனை சந்திரிகாவும், பேராசிரியரும் அறிவார்கள் என்றே நம்புகிறோம்.

## சிக்காக்கோ 'பிரசங்க நூற்றாண்டு விழா நிகழ்வு

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் நடத்தும் சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ பிரசங்க நூற்றாண்டு விழா நாளையும் எதிர்வரும் சனிக்கிழமையன்றும் நடைபெறவிருக்கின்றது.

நாளைய நிகழ்ச்சிகள் இராமகிருஷ்ணாலயத்திலிருந்து சுவாமி விவேகானந்தரின் திருவுருப்படம் பாண்ட் அணிவகுப்பு மேள வாத்தியம் ஆகியவை சகிதம் வீதியுலாவாக யாழ் பல்கலைக்கழகத்துக்கு எடுத்து வருவதுடன் ஆரம்பமாகும்.

அதன் பின்னர் முற்பகல் 10மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை காலை நிகழ்ச்சிகளும் பிற்பகல் 3.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை மாலை நிகழ்ச்சிகளும் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

நாளை காலை நிகழ்ச்சிகளில் நல்லை ஆதீன சுவாமி, யாழ் மறை மாவட்ட றோமன் கத்தோலிக்க மதபீட குரு முதல்வர் வண. எஸ்.கே. இம்மானுவேல், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மருதனாமடம் இறையியல் கல்லூரி முதல்வர் அருட்திரு டானியல் எஸ். தியாகராஜா, நல்லூர் பிரதேச செயலர் திருமதி கமலாதேவி சிவசிதம்பரம், ஆசிரியமணி, ஆர் ரி. சுப்பிரமணியம் வட இலங்கை சர்வோதய அறங்காவல் திரு.க.திருநாவுக்கரசு ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. கிருஷ்ணவேணி நோபேட் ''சுவாமி விவேகானந்தரின் நோக்கில் இந்து தத்துவங்கள்'' என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துவார்.

மாலை நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ் கல்வி வலயம் 1இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தனும் கலந்து கொள்வர்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் ''இந்து சமயத்தின் மேன்மையை உலகறியச் செய்த சுவாமி விவேகானந்தர்'' என்ற தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துவர்.

நாளைய இறுதி நிகழ்ச்சியாக யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் செல்வி பாக்கியலக்ஷ்மி நடராஜாவின் வயலின் கச்சேரி இடம்பெறும்.

பாடசாலை பல்கலைக்கழகம் மற்றும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சு கட்டுரை ஆய்வுக்கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பும் அவர்களது சாதனைகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளும் நாளைய விழாவில் இடம் பெறவிருக்கின்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் எதிர்வரும் சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (உ)

## யாழ். திருமறைக் காலாமன்ற தமிழ் விழா இன்று ஆரம்பம்

யாழ். திருமறைக்கலா மன்றம் ஏற்பாடு செய்துள்ள தமிழ்விழா இன்று முதல் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

யாழ் பிரதான வீதி மன்ற அரங்கில் மாலை 6 மணிக்கு புனித சவேரியார் குருமட அதிபர் அருட்திரு எஸ். ஜே. இம்மானுவல் தலைமையில் இன்றைய நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மன்றத்தின் ஆஸ்தான கவிஞர் யாழ். ஜெயம் இன்றைய நிகழ்ச்சியின்போது கௌரவிக்கப்படவுள்ளார். யாழ் ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளின் பாராட்டு உரையும் அங்கு இடம்பெறும்.

தொடர்ந்து ''தமிழ் இலக்கியத்தில் பெண்மையின் குணப் பரிமாண நித்திலிப்பு'' என்ற தலைப்பில் செல்வி கலாநிதி சண்முகநாத பிள்ளையின் சிறப்புரை இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் ''வீரமா முனிவரின் பன்முகப் பணி'' என்னும் தலைப்பில் கருத்தரங்கு இடம் பெறும்.

இன்றைய கலை நிகழ்ச்சிகளாக மன்றக் கிராமியக் கலைப் பிரிவு வழங்கும் வில்லுப்பாட்டும், மன்ற நாடகப் பிரிவு வழங்கும் ''ஔவையார்'' நாடகமும் நடைபெறும். (எ-5-51)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் பாடசாலை அணிகள் வருமாறு:-

அத்தியார் இந்துவில்

★ 17 வயதுப் பிரிவு:- ஹாட்லி எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மற்றும் யூனியன் எதிர் சென். ஹென்றிஸ்.

★ 19 வயதுப் பிரிவு:- புத்தூர் சோமஸ்கந்தா எதிர் யூனியன்.

முத்துத்தம்பி ம. வியில்

★ 17 வயதுப் பிரிவு:- கனகரத்தினம் ம. ம. வி. எதிர் சென் ஜோன்ஸ்.

★ 19 வயதுப் பிரிவு:- கனகரத்தினம் ம. ம. வி எதிர் யாழ். மத்திய கல்லூரி.

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இடையிலான - 15,17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் மூன்று மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் அரியாலை வி. க. அணியை எதிர்த்து பேசும் மீன் வி. க. அணி மோதும்.

★ ★ ★

பி. விபுலாநந்தா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் வி. க. நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 3 30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறவிருக்கின்றன. ஒல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து பல்கலைக்கழக ''ஏ'' அணியும், சென்றலைட்ஸ் சொர்க்ஸ் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் சிவப்பு அணியும் மோதவுள்ளன.

★ ★ ★

சிறுப்பிட்டி மேற்கு புத்தூர் மேற்கு கிராமிய பாசறை நிகழ்வில் இன்றைய விளையாட்டு நிகழ்வாக தாச்சிப் போட்டியில் நவக்கிரி எவ்லாவன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் விளையாடும்.

உதைபந்தாட்டப் போட்டியில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் மோதும்.

''செற்றப் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி, மட்டுவில் மகாவித்தியாலயம் ஆகியன பங்கு பற்றும்.

## ஜே.ஆர். அன்று பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கலாம்!

### சு. கட்சி எம்.பி சொல்கிறார்

கொழும்பு, மே 21

ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது காலத்திலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கலாம் அன்று அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் நாடாளுமன்றத்தில் இருந்தது.

சுதந்திரக் கட்சி எம். பி ஜனாட்ஷம் சுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண கிடைத்த சந்தர்ப்பம் அன்று தவற விடப்பட்டது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவுகளும் அட்டிக் கழிக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

## புலிகளின் குரல் வானொலியில்

23 - 05 - 1994
திங்கள் இரவு

★ 8-01 — தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — செய்திச்சரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் இசையமைப்பாளர் அருணா அவர்களுடனான செவ்வி

24 - 05 - 1994
செவ்வாய் காலை

★ 7-03 — மாவீரவணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்.

## நேர்முகப்பரீட்சை: இவர்களும் தோற்றலாம்

யாழ்ப்பாணம், மே. 23

கொழும்பிலும், ஏனைய பிறமாவட்டங்களிலும் இருந்து விண்ணப்பித்து தற்சமயம் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வேலையற்ற பட்டதாரிகளும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையில் தோற்றலாம் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் மேற்படி நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது தெரிந்ததே. (உ-5)

## தீர்மானங்கள் மீள்பரிசீலனை

யாழ்ப்பாணம், மே 23

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களும், மொத்த வியாபாரிகளும் சேர்ந்து எடுத்த எட்டுத் தீர்மானங்களும் — மீள் பரிசீலனைக்காக இப்போது ஆராயப்பட்டு வருவதாக வ.யா.ஆ ம.வ. மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் 19 - 5 - 94 ஆம் திகதிய உதயனில் வெளியாகியிருந்தன.

தீர்மானங்களின் மீள்பரிசீலனை முடிந்ததும் அவை பற்றிய முடிவு முழுமையாக வெளியிடப்படும் என்று மன்றத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (அ)

## பிரேமா உட்பட நால்வருக்கு முத்திரை

கொழும்பு, மே 22

தேசிய வீரர் தினத்தை முன்னிட்டு கொழும்பு பெரிய தபாற்கந்தோரில் இந்த வாரத்தில் முக்கிய பிரமுகர்களைக் கௌரவிக்குமுகமாக ஒரு ரூபா பெறுமதியான நான்கு புதிய முத்திரைகள் வெளியிடப்பட உள்ளன.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா, மறைந்த பிரபல அரசியல் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, வண. தர்மரத்தின தேரர், கிழக்கு மாகாண தமிழறிஞரான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரே இந்த நால்வரும் ஆவர். (இ-எ)

## தென்கொரியா பயணம்

கொழும்பு, மே 22

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஞாயிறு தென்கொரியா பயணமாகினார்.

---

தமிழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இப்போது சினிமாக் கவர்ச்சி இல்லை. அவர்களுக்கு வேண்டியது வாழ்க்கையில் முன்னேறும் வாய்ப்பு.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு அதிர்ச்சி தரும் வகையில் பின்னடைந்து வருகிறது.

இலவச வேட்டி, குடை, செருப்பு என்று எத்தனை நாட்களுக்கு ஏமாற்ற முடியும்?

ஒரு சமூகத்தையே பிச்சைக்காரர்களாக்கும் இந்த மரபு நம்மை எங்கே கொண்டு செல்லப் போகிறது என்று எனக்குக் கவலையாக இருக்கிறது.

இப்படி அவர் தெரிவித்தார். (உ-எ)

---

நரோமா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நரோமா கப்பல் வழக்கமாக வாரம் தோறும் திங்கட்கிழமையன்று திருமலையிலிருந்து பயணிகளுடன் புறப்பட்டு [illegible]

## ஐரோப்பிய சமூகத்துடன் ஒத்துழைப்பு உடன்படிக்கை; ஒப்பமிட தவறிய அமைச்சர்

கொழும்பு, மே 21

பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடன் கைச்சாத்திடப்படவிருந்த ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டிய இலங்கை அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர், லண்டனில் இருந்து நேராக பிரஸ்ஸல்ஸ் போகாமல் கொழும்புக்கு திரும்பிவிட்டார். அதனால் அந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.

கடந்த 16ஆம் திகதி காலை 11 மணியளவில் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பிரதிநிதிகள் பிரஸ்ஸல்ஸில் குழுமி இருந்தனர்.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் அங்கம் வகிக்கும் 12 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், சமூகத்தின் அமைச்சரவை உறுப்பினர்கள் ஆகியோரும் இலங்கை அமைச்சரின் வருகையை எதிர்பார்த்துக் காத்து இருந்தனர். ஆனால் அமைச்சர் வரவில்லை. மேலும் அரை மணி நேரம் அவர்கள் காத்து நின்றனர். அப்போதும் இலங்கை அமைச்சர் அங்கு போய்ச் சேரவில்லை. அதன் பின்னர் காத்து நின்றவர்கள் திரும்பிச் சென்றனர்.

ஆனால் லண்டனில் தங்கி இருந்த இலங்கை அமைச்சரோ திட்டமிட்டபடி நேராக பிரஸ்ஸல்ஸ் செல்லாமல் கொழும்பு திரும்பிவிட்டார்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் ஜனாதிபதி விஜேதுங்கா விளக்கம் கோர இருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைச்சாத்திடப்பட இருந்த உடன்படிக்கையின் கீழ் இலங்கையில் 20 வளர்ச்சித்திட்டங்களுக்கு ஐரோப்பிய பொருளாதார சமூகம் நிதி உதவி அளிக்க இருந்தது.

இனி இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கை எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை காத்திருக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## அ.தி.மு.க அரசை கலைக்க ராவ் காலையும் பிடிப்போம்

### வாழப்பாடி கூறுகிறார்

சென்னை, மே 21

முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. அரசைக் கலைக்கும்படி பிரதமர் நரசிம்மராவின் காலைப் பிடித்தாவது கெஞ்சுவோம்.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி முன்கண்டவாறு தெரிவித்தார்.

தறிகெட்டு ஓடும் அ. தி. மு. க. அரசு என்ற குதிரையை தடுத்து நிறுத்த மக்கள் தயாராக வேண்டும் என்றும் அவர் சொன்னார். (இ-எ)

## புத்தளத்தில் மீனவர் உடைமை தீவைப்பு 4 பொலீஸார் இடைநிறுத்தம்

புத்தளம் மாவட்டத்தில் உள்ள சேராக்குளி கிராமத்தில் நடந்த மீனவர் உடைமைகள், தீவைப்பு தொடர்பாக 4 பொலீஸார் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அசம்பாவிதம் தொடர்பாக பொலீஸார் அசமந்தமாக நடந்து கொண்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கு தெரிவிக்கப்பட்ட புகாரையடுத்தே இவர்கள் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு சிங்களவர் முஸ்லிம்களால் தாக்கப்பட்டதையடுத்தே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது.

புத்தளப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் படியும் —

கடமையை புறக்கணித்த பாதுகாப்பு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் — ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு செயலாளரை கேட்டுள்ளனர். (த-3)

## வட-கிழக்கு பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களை அ. அதிபர்களே நிரப்புவர்!

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பொறுப்பு அந்த அந்த மாவட்ட அரச அதிபர்களிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

அண்மையில் நடந்த தேசிய புனர்வாழ்வு குழு மாநாட்டில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்று தெரிவித்தது.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் வகையில், அரச அதிபர்கள் வெற்றிடங்களை இனம் கண்டு விண்ணப்பங்களை கோரி உரிய நியமனங்களை வழங்குவதற்கும் அரச அதிபர்களுக்கு இம் மாநாட்டில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறும் பொறுப்பு கொள்கை திட்டமிடல் அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் கலாநிதி பி. இராமானுஜத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-3)

## 'சொத்தி உபாலி' மீதான விசாரணையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டாம்

### பொலீஸ் தலைமைப்பீடம் உத்தரவு

தடுத்து வைக்கப்பட்டுள்ள சொத்தி உபாலியை விசாரணைக்காக வேறு பொலீஸ் நிலையங்களிடம் ஒப்படைக்க வேண்டாம் என்று பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்கு பொலீஸ் தலைமைப்பீடம் உத்தரவிட்டுள்ளது.

முன் எச்சரிக்கை நடவடிக்கையாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

எந்தக் கட்டத்திலும்சொத்தி உபாலிபம்பலப்பிட்டிபொலீஸ் நிலையத்திலிருந்து வெளியே கொண்டு செல்லப்படமாட்டார் என்று பொலீஸ் அதிகாரிகள் கூறினர்.

சொத்தி உபாலியை விசாரிக்க நீர் கொழும்பு, பொரளை, மிரிஹான மற்றும் பாதுக்க பொலீஸார் அனுமதி கோரியிருக்கின்றனர்.

பொலீஸ் தலைமைப் பீடத்தின் உத்தரவை அடுத்து நீர் கொழும்பு மற்றும் மிரிஹான பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த இருபொலீஸ் குழுக்கள் பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்குச் சென்று உபாலியை விசாரித்தன. [இ-எ]

---

'சுப்பசொனிக்'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வீச்சால் மனோகரி (வயது 11) என்ற சிறுமி அதிர்ச்சியுற்று நினைவு தடுமாறிய நிலையில் உள்ளார்.

குண்டு வீச்சால் வாழைத் தோட்டம் ஒன்றில் நின்ற ஆயிரக் கணக்கான வாழைகள் அப்படியே அழிந்தன; இவ்வாழைகளில் அனேகமானவை குலைகள் தள்ளிய நிலையில் இருந்தன எனறு தெரிவிக்கப்பட்டது. அறுவடைப் பருவத்தில் இருந்த வெங்காய, கரட், மரவள்ளித் தோட்டங்களும் அழிவுற்றன.

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மே 23

நாளை வைகாசி விசாகப் பௌர்ணமியாகும். அதனை முன்னிட்டு இன்று குடாநாட்டில் உள்ள முருகன் ஆலயங்களில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. விநாயகர் ஆலயங்கள் பலவற்றிலும் இன்று தேர்த்திருவிழாக்கள் நடைபெற உள்ளன.

கோப்பாய் வடக்கு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவில் வட்டுக்கோட்டை மேற்கு சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயம் ஆகியவற்றிலும் —

அக்வாய் அரசடி விநாயகர் கோவில், அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் கந்தரோடை அருள்மிகு ஸ்ரீ அருணாவத்தைப் பிள்ளையார் கோவில், சித்தங்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவில், கொழும்புத்துறை மேற்கு வதிரிபிட்ட விநாயகர் ஆலயம் ஆகியவற்றிலும் —

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீவிஸ்வநாத சுவாமி கோவில், திருநெல்வேலி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயம், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் ஆகியவற்றிலும் — இன்று தேர் திருவிழாக்கள் சிறப்புற நடைபெறுகின்றன.

★ ★ ★

கச்சாய் கண்ணகி அம்மன் கோவில் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் இன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.

★ ★ ★

ஏழாலை மத்தி கண்ணகை புரம் அருள்மிகு கண்ணகை அம்பாள் வைகாசி விசாகப் பொங்கல் இன்று நடைபெறுகிறது.

★ ★ ★

தென் புலோலி அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலய மணவாளக்கோலம் இன்று நடைபெறுகிறது, காலை சங்காபிசேகமும், பிற்பகலில் சுவாமி வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு மூத்த சமய விரிவுரையாளர் சபாரத்தின ஈஸ்வரசர்மா ''அன்னைத் தொழுது அற்றாடம் தொடங்குவோம்'' என்ற பொருளில் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார். (அ-89-28-111-72-17)

★ ★ ★

அளவெட்டிதெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் வைகாசி விசாகத் திருவிழா நாளை செவ்வாய் நடைபெறவுள்ளது. (எ-5-51)

★ ★ ★

ஏழாலை தெற்கு வசந்தபுரம் வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் நாளை செவ்வாய் நடைபெறும்.

அதிகாலை 5 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும் தொடர்ந்து விசேட மேளக்கச்சேரியும், காரைநகர்ச்சம்பன்கழக அமைப்பாளர் திரு. த சிவகுமாரனின் சமயச் சொற்பொழிவும் அங்கு இடம்பெறும். (எ-39-5)

## 'கோமாரி' புதனன்று வரும்

யாழ்ப்பாணம், மே 23

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரிசி, சீனி, மைசூர் பருப்பு ஆகியவற்றை ஏற்றிவரும் இக்கப்பலில், இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரண முத்திரைகளும் எடுத்து வரப்படவிருக்கின்றன. (உ-3)

---

எவரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் எல்லோரும் சேர்ந்து வளர்த்த கட்சியாகும். அதற்காக 25 வருடங்களை எனது வாழ்வில் அர்ப்பணித்துள்ளேன். —

திரு. பிரேமதாசா, திரு. அத்துலத்முதலி ஆகியோரும் நானும் சேர்ந்து உழைத்தே ஐ.தே.கவை ஆட்சிக்குக் கொண்டு வந்தோம்.

நான் பெரியவர்களின் ஆதரவில் ஐ. தே. கவில் முக்கிய பதவிகளை என்றும் பெற்றுக் கொண்டதில்லை. ஐ.தே.க. பலவீனமடைந்திருந்த வேளையில் அதில் சேர்ந்த நான், பலரும் கட்சியை வெறுத்து ஒதுக்கிய வேளையில் (1970—1977 வரை) நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று கட்சியை வளம்படுத்த உதவினேன்; உழைத்தேன். — என்றும் திஸநாயக்கா தமது பேட்டியில் தெரிவித்தார். (அ-6)

---

**சீதனப் பிசாசின் சிரத்தினை அறுக்க பேதைமை விட்டே புறப்பட்டு வா!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கந்தையா வேலுப்பிள்ளை

(யாழ் மாவட்ட முன்னாள் தொலைத் தொடர்பு பொறியியலாளர்)

தோற்றம்; 17-02-1940 | மறைவு; 21-05-1986

திதி: 23-05-1994

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் எட்டு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டாலும், உங்கள் அன்பு முகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும், மறையவே மறையாது. தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"வேலகம்"
குருக்கட்டு,
சரணவாய் தெற்கு
கரவெட்டி. (7406)

# மரண அறிவித்தல்கள்

## A. G. A. சந்திரன்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கரம்பொனை வதிவிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வசித்தவரும், ஓய்வு பெற்ற துறைமுக சரக்கு கூட்டுத்தாபன உத்தியோகஸ்தருமாகிய அ. யோ. அ. சந்திரன் 08-05-1994இல் அகால மரணமானார்.

இவர் ஜெயசீலியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அல்பிரட் (விதானையார்) மேரி அவர்களின் மகனும், காலஞ்சென்ற ராஜதுரை பிறிஜெற்றின் மருமகனும், சத்தியா (கனடா), காலஞ்சென்ற பிறியா, சிறியா ஆகியோரின் அன்புத் தந்தையும், குணராஜசிங்கத்தின் (கனடா) மாமனாரும், ரஞ்சிதன், ரபீந்திரன், சர்வானந்தன் (பொலீஸ் அத்தியேட்சகர்), ஜெயானந்தன் ஆகியோரின் சகோதரரும், அஞ்சலோ, ஜோசப், அருட்திரு பொணிபஸ் (ஆனைக்கோட்டை பங்குத்தந்தை), அன்ரன், வசந்தி மரியநாயகம் (கொழும்பு) சாந்தி சுவாம்பிள்ளை (திருகோணமலை), சுகந்தி இன்பநாதன் (துபாய்), ஜெயராஜ் (கனடா), சித்திராவதி, றூபா சூரியா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 11-05-94இல் கிளிநொச்சியில் அடக்கம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
ஜெயசீலி சந்திரன்.
(மனைவி)
வ. அஞ்சலோ,
(மைத்துனர்)

இல. 11/9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (31049)

## திருமதி சிவஞானம் இராசையா

புகையிரத நிலையவீதி, சுன்னாகம் முகவரியில் வசித்த திருமதி சிவஞானம் இராசையா 19-05-94 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற Dr ந. இராசையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு இராஜசிங்கம், காலஞ்சென்ற Dr. இராஜேந்திரா, Dr இராஜபாலன், (அவுஸ்திரேலியா), Dr. இராஜகோபாலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன.

உறவினர் நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சி. நம்பிக்கை
(சகோதரன்)

(31044)

## திருமதி கமலாம்பிகை கனகசபாபதி

திருமதி கமலாம்பிகை கனகசபாபதி காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதியின் அன்பு மனைவியும், லீலாகுமாரி குமாரசாமி, குலகுமாரி, கிருஷ்ணானந்தம் ஆகியோரின் தாயாரும், க. குமாரசுவாமி, காலஞ்சென்ற கிருஸ்ணானந்தம் (முன்னாள் முருகன் ஸ்ரோர்ஸ் நல்லூர் - உரிமையாளர்) ஆகியோரின் மாமியாரும், நிதியா, வித்தியா, வைஸ்ணவி, தர்சன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற க. சி. குலரத்தினத்தின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 22-05-94 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி சூரியகுமாரி கிருஸ்ணானந்தம்.
2, சந்தபுராண வீதி,
சந்நதிமடம். (31040)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23 05 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

# தென்மராட்சியில் சுவாமி விவேகானந்தர்
# உலகச் சமயப் பெருவிழா

"நான் தத்துவஞானியல்லேன்; ஆத்ம ஞானியுமல்லேன்; நான் ஏழை; ஏழைகளை நேசிக்கிறேன் அவ்வளவு தான்"

எனது நாட்டில் ஒரு நாய் உணவில்லாமல் இருந்தாலும் அதற்கு உணவிடுவதே என் மதமாகும்.



இடம்: சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்

காலம்: செவ்வாய்க்கிழமை **24-05-1994**

நேரம்: பிற்பகல் 3மணி

தலைவர்: செல்வி கி. வீரசிங்கம் (அதிபர், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்)

சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படத்தை
பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை
திரை நீக்கம் செய்து வைப்பார்

நிகழ்ச்சிகள்: கருத்தரங்கு; கலை நிகழ்வுகள்

சிறப்பு நிகழ்ச்சிகள்:

1. டிறிபேக் கல்லூரி, இந்துக்கல்லூரி அதிபர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் நூல்கள் அன்பளிப்பு
2. சாவ. மகளிர் மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய மாணவர்கள் பலருக்கு சுவாமியின் பெயரால் பலவகை அன்பளிப்புகள் வழங்கப்படும்.

● விழா ஆரம்பத்தில் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

குறிப்பு: சிறிய நூல்கள் மட்டும் விழாவில் விற்பனை செய்யப்படும்.

எவனுடைய இதயம் ஏழைக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன்; மற்றவர்கள் துராத்மாக்களே ஆவர்.

ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள் ஆகிய இவர்களே உன்னுடைய தெய்வங்களாக விளங்கட்டும்.

— ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை (சி-8310)

# இதய அஞ்சலி

## சிவதர்சினி சின்னத்தம்பி
## வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

கேம்படி மகளிர் கல்லூரி 95 ஆம் ஆண்டு கணிதப் பிரிவு மாணவி சிவதர்சினி, அவரின் தந்தை சின்னத்தம்பி அகால மரணம் அடைந்ததையிட்டு அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துவதோடு, இவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

95 ஆம் ஆண்டு கணிதப் பிரிவு
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
(31065)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரம்

மண்ணில்: 22-05-1932 | விண்ணில்: 23-04-1994

துணிவாகி நின்ற எம் தூண் சரிந்ததால்
துயரத்தில் நாம் மூழ்கி தத்தளித்தோம்
உம் இழப்பை நிரப்ப முடியாமல்
நித்தமும் கலங்கி நிற்கிறோம் ஐயா.

நித்தமும் உங்கள் நினைவால்
துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

படுகாயம்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வெடித்தன.

### தலை பிளந்தது

சுளித்துக் கொண்டிருந்த எனது மகள் குண்டு வெடிப்புச் சத்தம் அடங்குவதற்குள் அப்படியே சரிந்து விழுந்தார். நான் ஓடிச் சென்று மகளைத் தூக்கிய போது அவரின் தலை பிளந்து இரத்தம் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டேன் கிணற்றடியில் ஓடிய நீர் இரத்தமாகக் காணப்பட்டது.

குண்டு அதிர்ச்சியில் நீரிறைக்கும் இயந்திரமும் செயலிழந்தது.

பிள்ளைக்கு அருகில் நிலத்தில் விழுந்து கிடந்த எனது கணவர் காயம் ஏதுமின்றி எழும்பியதைப் பார்த்து திருப்தியுற்ற நான், காயமடைந்த என் மகளை தூக்கிக்கொண்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன்.

அங்கு எனது மகள் என்னை விட்டுப் பிரிந்தார்!

### எங்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியவர்

எமது மகள் எம்மை விட்டுப் பிரிந்தார் என்பதை எனது கணவரிடம் தெரிவிக்க வேண்டும் என நான் தவித்துக் கொண்டிருந்த வேளை அடுத்த பேரிடிச் செய்தி எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

என்னையும் எனது பிள்ளையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்த கணவர் அடுத்த கணமே அங்கு வந்த புக்காராவின் குண்டு வீச்சுக்கு இலக்கானார் என்பதையும், அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்துள்ளார்கள் என்பதையும் கேட்டு அதிர்ச்சியுற்றேன்.

காயத்துடனாவது அவரைப் பார்க்கலாம் என்று எண்ணியவாறு கதறியபடி ஓடி வந்த நான் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் பிரேதமாகவே அவரைக் காணமுடிந்தது.

### முகமின்றிக் கிடந்தார்

ஐயோ! முழுப்படியே வீட்டில் விட்டு விட்டு வந்த அவரை முகமின்றி — சிதறிய தலையுடனேயே — பார்க்கும் அவல நிலைக்கு ஆளானேன்

எனது ஒரு மகன் வெளிநாட்டில் வசிக்கிறான் என்று ஒரு மகளுடனும் கணவருடனும் நிம்மதியாக இருந்த அப்பாவியான நான், இன்று விமானக் குண்டு வீச்சால் ஒண்டிக் கட்டையாக நிற்கிறேன். இனி யாரை நம்பி, யாருக்காக வாழ்வேன்?

என்று புலம்பியவாறு அவர் கூறினார். (உ-15)

# அம்பாறையில் மற்றொரு சிங்களக் குடியேற்றம்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் புதிதாக சிங்கள குடியேற்றம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

வழத்தாப்பிட்டியில் நவீன வசதிகளுடன் இந்த குடியேற்றத் திட்டம் உருவாக்கப்படுகிறது.

இதற்கான ஆரம்ப வேலைகள் ஸ்ரீலங்கா புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பணிப்பின் பேரில் அம்பாறை மாவட்ட அரச அதிபரால் மேற்கொள்ளப்படுகிறது.

ஐம்பது ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நிலப்பரப்பில் உருவாகும் இக்குடியேற்றத் திட்டத்தில் சுமார் ஆயிரம் பேரைக் கொண்ட 242 குடும்பங்கள் குடியேற்றப்படவிருக்கின்றன.

இங்கேயே வழத்தாப்பிட்டியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் அப்பகுதியில் இருந்து படையினரால் விரட்டப்பட்டதை அடுத்து, தொடர்ந்தும் காரைதீவு அகதி முகாமில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-3]

## யாழ். குடாநாட்டிலிருந்து விரைவில் வெளிவரவிருக்கும் விளையாட்டுத்துறை செய்தி

# வார இதழுக்கு

## பிரதேச செய்தியாளர்கள் தேவை

விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இளைஞர்களுக்கு முன்னுரிமையும் பயிற்சியும் வழங்கப்படும், சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் மூலம் 01-06-94 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல, 937,
மே/பா, உதயன்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,

(சி-8084)

# PRAYERFUL 31st DAY REMEMBRANCE OF
# HARRY SANDRASAGRA

(Retired Senior Assistant Commissioner Co-Operative Development)

Peacefully Passed Away on 23rd April 1994 in Colombo May his soul Enjoy Eternal Rest safe In the Arms of Jesus.

Loving Niece;
Mrs Mirani Kailainathan.

14A 3rd Cross Street,
Jaffna. [30987]

# மரண அறிவித்தல்கள்

## திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

(தலைவர், ப. நோ. கூ. சங்கம்-நீர்வேலி)

நேற்றைய தினம் நீர்வேலி தெற்கில் அகால மரணமான வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் இறுதிக் கிரியைகள் நேற்று நீர்வேலி தெற்கில் நடைபெற்றன.

தகவல்:-
வலி. கிழக்கு தென் பகுதி
ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி

(சி/8313)

## கந்தசாமி நவமலர் (மலர்)

சங்கானை காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நவமலர் அவர்கள் 19-5-94இல் காலமானார். இவர் சிதம்பரப்பிள்ளை தவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் கந்தசாமியின் அன்பு மனைவியும், மதுரா, இராகுலன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சற்குணராஜா (பிரான்ஸ்), கமலவதனி (பிரான்ஸ்), குலேந்திரராஜா (லண்டன்), ஜெயசாந்தினி (மாணவி, யாழ் தொழில் நுட்பக் கல்லூரி), கவிதா (மாணவி, யூனியன் கல்லூரி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜெயந்தன் (பிரான்ஸ்), கனகேஸ்வரி, கிருபாசக்தி, கமலேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கார்த்திகா (பிரான்ஸ்) வின் அருமை பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-5-94 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் விளாவெளி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. சிதம்பரப்பிள்ளை
(தகப்பன்)

காளி கோவிலடி,
சங்கானை. (31039)

## M. S அரியநாயகம்

(Rtd Timberyard Director, N. Vaithilingam & Co.)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட M. S. அரியநாயகம் 22-05-94 இல் காலமானார்.

அன்னார் இந்திரமணி, சத்தியபாமா, லக்ஸ்மன் திசா, லக்ஸ்மிகுமார் (கனடா), லக்ஸ்மிகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலதேவன் (Rtd supt. Social Welfare Inst), சங்கரசிவம், ஜெயந்தி, சுகந்தா, செங்காதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-5-94 இன்று மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
லக்ஸ்மன் திசா
(மகன்)

"அரியம்"
மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு (31056)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org